


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 202 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 20 – புதன்கிழமை 04 மார்ச் 2026 – சென்னை 24 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 202 : Thiruvalluvar Year - 2057 - Maasi 20 - Wednesday 04 March 2026 - Chennai 24 Pages ₹ 5.00


## 40 லட்சம் பேருக்கு இன்ப அதிர்ச்சி!

# விளிம்பு நிலையில் இருப்போருக்கும் ரூ.2000 சிறப்பு நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு! அதிகாலையிலேயே வங்கிக் கணக்கில் வரவு வைப்பு!

**சென்னை, மார்ச் 4 -**

**சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதியோர், கைம்பெண்கள், மாற்றுத்திறனாளிகள், பராமரிப்பு உதவித்தொகைகள் பெற்று வரும் மாற்றுத்திறனாளிகள் குடும்பங்கள், வயது முதிர்ந்த திருநங்கையர்கள் என மொத்தம் 37,79,000 பயனாளிகளுக்கும் தலா ரூ.2,000 சிறப்பு நிதியாக அவர்களது வங்கிக் கணக்கில் நேற்று காலை வரவு வைக்கப்பட்டுள்ளது என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் பதிவு வருமாறு :-

**விளிம்பு நிலையில் இருப்போர்க்கும் சிறப்பு நிதி!**

கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் பெண்களுக்குக் கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கியது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழ்ந்து, அரசின் மாத ஓய்வூதியத் உதவித்தொகை பெற்று வரும் முதியோர், கைம்பெண்கள், வயது முதிர்ந்த திருநங்கையர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கும் இத்தகைய சிறப்பு நிதியை வழங்கிட வேண்டும் எனக் கோரிக்கைகள் வந்தன.

நம்பிக்கையுடன் அவர்கள் வைத்த கோரிக்கையை இன்று நிறைவேற்றியுள்ளோம்! நலிவு நிலை போக்கும் சிறப்பு நிதியாக 2000 ரூபாயை மார்ச் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வங்கிக் கணக்கில் வரவு வைத்துள்ளோம்!

**முதியோர் – கைம்பெண்கள் – மாற்றுத்திறனாளிகள் பயன்பெறுகின்றனர்!**

29 இலட்சத்து 29 ஆயிரம் பயனாளிகளுக்கு தலா 3.200 ரூபாயும்,

பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் பயன்பெற்று வரும் முதியோர், கைம்பெண்கள் என, மொத்தம் 29 இலட்சத்து 29 ஆயிரம் பயனாளிகளுக்கு தலா 3.200 ரூபாயும்,

5 இலட்சத்து 92 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளுக்கு தலா 3500 ரூபாயும்,



பராமரிப்பு உதவித்தொகை பெற்றுவரும் 2 இலட்சத்து 58 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களுக்கு, தலா 4.000 ரூபாயும் இன்று காலை வழங்கியிருக்கிறோம்.

அது மட்டுமின்றி, மீனவர் குடும்பங்களுக்கு ஏப்ரல் முதல் ஜூன் வரையான காலத்திற்கான மீன்பிடித் தடை கால உதவித்தொகையாக, குடும்பம் ஒன்றுக்கு ரூ.8.000 வீதம் மொத்தம் 1,62,900 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**மீன்பிடித் தடைக்கால உதவி நிதி உயர்வு!**

அதேபோல, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 14,870 தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையில், 15 கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்குக் கிலோ இரண்டு ரூபாய் ஆதார விலை என 8.53 கோடி ரூபாய் நிதி வழங்கப்படுகிறது.

இந்தத் தருணத்தில் மீண்டும் ஒருமுறை சூளுரைக்கிறேன், தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விட மாட்டோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.









சென்னையில் புதிய பிரம்மாண்ட பூங்கா !

118 ஏக்கரில் கிண்டி சுற்றுச்சூழல் பூங்கா

முதற்கட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அமையவுள்ள சிறப்பம்சங்களில் சில...




- கருத்தியல் தோட்டங்கள்
- காட்சி மேடைகள்
- மிதிவண்டிப் பாதை
- பறவைத் திட்டுகள்
- நீரியல் தோட்டம்
- நான்கு பெரிய நீர்நிலைகள்
- பரந்த புல்வெளிகள்
- நிழல் நடைபாதைகள்
- குழந்தைகள் விளையாட்டுத் திடல்கள் மற்றும் உணவகங்கள்

நாள் : 4.3.2026, புதன்கிழமை | நேரம் : 11.00 மணி | இடம் : தலைமைச் செயலகம், சென்னை.

செ.ம.தொ.இ/264/வரைகலை/2026

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம் !


### ரூ.11.88 கோடியில்

# கொளத்தூரில் மூத்த குடிமக்கள் உறைவிடம்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2026) தேவிபாலியம்மன் மற்றும் இளங்காளியம்மன் திருக்கோயில் சார்பில் கொளத்தூர், இராஜாஜி நகரில் 11.88 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூத்த குடிமக்கள் உறைவிடத்தை திறந்து வைத்து, பார்வையிட்டு, மூத்த குடிமக்களுடன் உரையாடினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மேயர் திருமதி ஆர்.பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, மார்ச் 4 -**

**ரூ.11.88 கோடி செலவில் கொளத்தூர், இராஜாஜி நகரில் கட்டப்பட்ட மூத்த குடிமக்கள் உறைவிடத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2026) தேவி பாலியம்மன் மற்றும் இளங்காளியம்மன் திருக்கோயில் சார்பில் கொளத்தூர், இராஜாஜி நகரில் 11.88 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூத்த குடிமக்கள் உறைவிடத்தை திறந்து வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல் சமூக நோக்கோடு செயல்படும் அறநிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. திருக்கோயில்களின் சார்பில் கல்வி நிறுவனங்கள், பயிற்சிப் பள்ளிகள், கருணை இல்லங்கள், மூத்த குடிமக்கள் உறைவிடங்கள், மனநலக் காப்பகம், மருத்துவ மையம் போன்றவை நடத்தப்பட்டு வருகின்றன.

2021-2022 ஆம் நிதியாண்டிற் கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில், “சென்னை, பழநி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மூத்த குடிமக்களைப் பேணிப் பாதுகாக்க மூத்த குடிமக்கள் உறைவிடங்கள் அனைத்து வசதிகளுடன் தொடங்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டதை நிறைவேற்றிடும் வகையில், முதலமைச்சர் அவர்கள் கடந்த 27.05.2025 அன்று திருக்கோயில்கள் சார்பில் கொளத்தூர், பழனி மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் மூத்த குடிமக்கள் உறைவிடம் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்.

சென்னை, கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வில்லிவாக்கம், அருள்மிகு தேவிபாலியம்மன் மற்றும் அருள்மிகு இளங்காளியம்மன் திருக்கோயில் சார்பில் 11.88 கோடி ரூபாய் செலவில் கொளத்தூர் இராஜாஜி நகரில் 25,500 சதுரடி கட்டட பரப்பளவில் 75 மூத்தக் குடிமக்கள் பயன்பெறும் வகையில் கட்டப்பட்டுள்ள மூத்த குடிமக்கள் உறைவிடத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்து, பார்வையிட்டு, மூத்த குடிமக்களிடம் அவர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த மூத்த குடிமக்கள் உறைவிடத்தில் நிர்வாக அறை, நல்ல காற்றோட்டம், போதுமான இடைவெளியுடன் குளியலறை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கூடிய 10 படுக்கைகள் கொண்ட அறை 5 எண்ணிக்கை, 4 படுக்கைகள் கொண்ட அறை ஒன்று, 3 படுக்கைகள் கொண்ட அறை 7 எண்ணிக்கை கொண்ட தங்கும் அறைகள், நவீன சமையலறை மற்றும் உணவருந்தும் கூடம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், பல்நோக்கு அறை, முதலுதவி அறை, இயன்முறை மருத்துவம், அவசர சிகிச்சை உதவி மையம் மற்றும் இயன்முறை மருத்துவ அறை, பார்வையாளர்கள் அறை, நூலகம், சிறு பூங்கா, மனமகிழ் மன்றம், முடி திருத்தகம், கண்காணிப்பு கேமராக்கள் போன்ற பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த உறைவிடமானது 60 வயதிற்கு மேற்பட்ட, குடும்பத்தில் பராமரிக்க வசதி வாய்ப்பில்லாத மூத்த குடிமக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதன் முழு பராமரிப்பிற்கான நிதியுதவியினை சென்னை, டி.வி.எஸ். மோட்டார்ஸ் நிறுவனம் வழங்குகின்றது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மேயர் திருமதி ஆர்.பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.